**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை : திருமதி.ஜா.ஆஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09ம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீவிசுவாவசு வருடம்,

பங்குனி திங்கள் 26ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.**100/2023

CNR No.TNDG100015432023

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்: 390/2023

எதிரிகளின்பெயர்கள்–

1. பிரேம் த/பெ.முத்தழகு
2. வெண்ணிலா த/பெ.பிரேம்
3. ஸ்ரீதர் த/பெ.முத்தழகு
4. சுரேஷ் த/பெ.முத்தழகு
5. திருமலை த/பெ.முத்தழகு
6. பழனி த/பெ.சின்னையா
7. ராஜேந்திரன் த/பெ.பள்ளிக்கூடத்தான் (**இறப்பு**)
8. கருத்தழகு (எ) சின்னத்தம்பி
   த/பெ.அழகு (எ) கட்டையன்

| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No.814/2020/RG/FI(P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
|---|---|---|---|---|---|
| **CASE SUMMARY** | | | | | |
| (i) | The period of remand of the accused | : | Name of the Accused | Date of Arrest/Remand | Release on |
| | | | 1. பிரேம் 28/2020 த/பெ.முத்தழகு பன்னியாமலை, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | -- | 27.12.2020 |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:24:11 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 2. வெண்ணிலா 25/2020 த/பெ.பிரேம் பன்னியாமலை, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | | 27.12.2020 |
| | | | 3. ஶ்ரீதர் 45/2020 த/பெ.முத்தழகு பன்னியாமலை, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | | 27.12.2020 |
| | | | 4. சுரேஷ் 43/2020 த/பெ.முத்தழகு பன்னியாமலை, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | | 27.12.2020 |
| | | | 5. திருமலை 38/2020 த/பெ.முத்தழகு பன்னியாமலை, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | | 27.12.2020 |
| | | | 6. பழனி 50/2020 த/பெ.சின்னையா பன்னியாமலை, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | | 27.12.2020 |
| | | | 7. ராஜேந்திரன் 47/2020 **(இறப்பு)** த/பெ.பள்ளிக்கூடத்தான் பன்னியாமலை, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | | 27.12.2020 |
| | | | 8. கருத்தழகு (எ) சின்னத்தம்பி 60/2020 த/பெ.அழகு (எ) கட்டையன் பன்னியாமலை, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | | 27.12.2020 |
| (ii) | Date of filing of the complaint/final report in the court | : | Filing of Complaint<br>12.05.2020 | Filing of Final Report<br>06.02.2021 | |
| (iii) | Date of committal of the cases to the Court of Sessions: | : | Nil | | |
| (iv) | Date of questioning of the accused under Section 228, 240 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be; | : | 02.09.2023ம் தேதி அன்று நத்தம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 324, 427, 147, 294(b) (2 எண்ணிக்கை), 506(ii) (2 எண்ணிக்கை)யின் கீழும் குற்றம் குறித்து விளக்கி கூறப்பட்டது. | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (v) | Filing of all miscellaneous petitions and their results | : | Crl.M.P.No. | Date of Filing | Result |
| | | | Nil | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vi) | Date of Examination in Chief and Cross | : | Name of the Examination | Date of Chief | Date of Cross |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:24:24 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | PW1 | திரு.ராஜா | 07.12.2023 | 07.12.2023 |
| | | PW2 | திரு.ஜெயச்சந்திரன் | 01.10.2024 | 01.10.2024 |
| | | PW3 | திருமதி.சித்ரா | 17.02.2026 | 17.02.2026 |
| | | PW4 | திரு.குருசாமி | 12.03.2026 | 12.03.2026 |
| | | PW5 | திரு.வெள்ளைச்சாமி | 12.03.2026 | 12.03.2026 |
| | | PW6 | திரு.சக்தி | 12.03.2026 | 12.03.2026 |
| | | PW7 | திரு.சிவக்குமார் | 24.03.2026 | 24.03.2026 |
| | | PW8 | திரு.கார்த்திகேயன் | 26.03.2026 | 26.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vii) | Date of examination of the accused under section 313 of the Code; | | 27.03.2026 | | |
| (viii) | Details of abscondance of an accused and his appearance /production, as the case may be; and | | Nil | | |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result |
| | | | Nil | | |

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டு: | | கடந்த 07.05.2020ம் தேதி இரவு 10.00 மணிக்கு பன்னியாமலை கிராமத்தில் முன் விரோதம் காரணமாக வாதியின் உறவினர் குருசாமி மகன் ஜெயச்சந்திரன் என்பவரை 1, 3, 4 எதிரிகள் சேர்ந்து ஜெயச்சந்திரன் தலையிலும், வலது பக்க காதிலும் கம்பால் அடித்து விட்டதாகவும், ஜெயச்சந்திரனுக்கு சொந்தமான TN 57 BD 1550 என்ற இருசக்கர வாகனத்தை கீழே தள்ளிவிட்டு வாதிக்கு சொந்தமான TN 38 BH 8704 என்ற பொலிரோ காரில் ஜெயசந்திரனையும், அவரின் தாயார் சித்ரா ஆகியோர்களையும் ஏற்றிக்கொண்டு வாதி 07.05.2020ம் தேதி இரவு 11.00 மணிக்கு நத்தம் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்காக பன்னியாமலை ஊரின் மேற்கே உள்ள மெயின்ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது எதிரிகள் அனைவரும் ஒன்றுகூடி வாதியின் வண்டியை மறித்து 2, 4 எதிரிகள் இருவரும் சேர்ந்து கல்லால் காரின் முன்பக்க கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியும், 5 முதல் 8 எதிரிகள் ஆபாசமான வார்த்தைகளால் திட்டியும் கொலை மிரட்டல் விடுத்ததாக 1, 3 எதிரிகள் மீது பிரிவுகள் 147, 324, 506(ii) இ.த.சவின் கீழும், 5, 6 மற்றும் 8 எதிரிகள் மீது பிரிவுகள் 147, 294(b), 506(ii) இ.த.சவின் கீழும், 2வது எதிரி மீது பிரிவு 147, 427 இ.த.சவின் கீழும், 4வது எதிரி பிரிவுகள் 147, 324, 427, 506(ii) இ.த.சவின் கீழும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். |
| எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | : | அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், இவ்வழக்கின் 1, 3 எதிரிகள் மீது பிரிவுகள் 506(ii) இ.த.சவின் கீழும், 5, 6 மற்றும் 8 எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 506(ii) இ.த.சவின் கீழும், 2வது எதிரி மீது பிரிவு 427 இ.த.சவின் கீழும், 4வது எதிரி பிரிவுகள் 427, 506(ii) இ.த.சவின் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் மீதான மேற்படி குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை 1 |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:24:30 +0530

| | | |
|---|---|---|
| | | முதல் 6 மற்றும் 8 எதிரிகளுக்கு வழங்கி, மேற்படி 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.<br><br>2) இ.த.ச பிரிவு 147 ன் கீழான குற்றசாட்டை பொறுத்து 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் குற்றவாளிகள் என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், இ.த.ச பிரிவு 147ன் கீழ் முதல் 6 மற்றும் 8 எதிரிகளுக்கு ரூ.200/- அபராதம் விதித்தும், செலுத்த தவறினால் கூடுதலாக 1 வாரம் சிறை தண்டனை விதித்தும், இ.த.ச பிரிவு 324 ன் கீழான குற்றசாட்டை பொறுத்து 1ம் எதிரி குற்றவாளி என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், இ.த.ச பிரிவு 324ன் கீழ் 1வது எதிரிக்கு ரூ.2500/- அபராதம் விதித்தும், செலுத்த தவறினால் கூடுதலாக 1 மாதம் சிறை தண்டனை விதித்தும், இ.த.ச பிரிவு 323 ன் கீழான குற்றசாட்டை பொறுத்து 3, 4 எதிரிகள் குற்றவாளிகள் என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், இ.த.ச பிரிவு 323ன் கீழ் 1வது எதிரிக்கு ரூ.1000/- அபராதம் விதித்தும், செலுத்த தவறினால் கூடுதலாக 1 மாதம் சிறை தண்டனை விதித்தும், கு.வி.மு.ச பிரிவு 248(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் முன்பிணையில் சென்றுள்ளதால் கு.வி.மு.ச பிரிவு 428ன் கீழான உத்தரவு குறித்து விளக்கப்படவில்லை. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை. மொத்த அபராத தொகை ரூ.5900/- |
| உத்தரவு | : | இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை. |

இவ்வழக்கு 21.07.2023ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 27.03.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் திரு.M.கண்ணன், வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கானது சட்டப்பிரிவுகள் 294(b), 147, 324, 427, 506(ii) இந்திய தண்டனைச் சட்டம் 1860ன் கீழும், தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழும் நத்தம் காவல் நிலைய காவல் சார்பு ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இதன் பிறகு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.09 07:24:43 +0530

இந்திய தண்டனைச் சட்டம் 1860 இ.த.ச எனவும், குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 கு.வி.மு.ச எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) **<u>இறுதியறிக்கையின்படி அரசு தரப்பு வழக்கு :-</u>**

கடந்த 07.05.2020ம் தேதி இரவு 10.00 மணிக்கு பன்னியாமலை கிராமத்தில் முன் விரோதம் காரணமாக வாதியின் உறவினர் குருசாமி மகன் ஜெயச்சந்திரன் என்பவரை 1, 3, 4 எதிரிகள் சேர்ந்து ஜெயச்சந்திரன் தலையிலும், வலது பக்க காதிலும் கம்பால் அடித்து விட்டதாகவும், ஜெயச்சந்திரனுக்கு சொந்தமான TN 57 BD 1550 என்ற இருசக்கர வாகனத்தை கீழே தள்ளிவிட்டு வாதிக்கு சொந்தமான TN 38 BH 8704 என்ற பொலிரோ காரில் ஜெயசந்திரனையும், அவரின் தாயார் சித்ரா ஆகியோர்களையும் ஏற்றிக்கொண்டு வாதி 07.05.2020ம் தேதி இரவு 11.00 மணிக்கு நத்தம் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்காக பன்னியாமலை ஊரின் மேற்கே உள்ள மெயின்ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது எதிரிகள் அனைவரும் ஒன்றுகூடி வாதியின் வண்டியை மறித்து 2, 4 எதிரிகள் இருவரும் சேர்ந்து கல்லால் காரின் முன்பக்க கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியும், 5 முதல் 8 எதிரிகள் ஆபாசமான வார்த்தைகளால் திட்டியும் கொலை மிரட்டல் விடுத்ததாக 1, 3 எதிரிகள் மீது பிரிவுகள் 147, 324, 506(ii) இ.த.சவின் கீழும், 5 முதல் 8 எதிரிகள் மீது பிரிவுகள் 147, 294(b), 506(ii) இ.த.சவின் கீழும், 2வது எதிரி மீது பிரிவு 147, 427 இ.த.சவின் கீழும், 4வது எதிரி பிரிவுகள் 147, 324, 427, 506(ii) இ.த.சவின் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண் – 100/2023 என கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் முன்னிலையானவுடன், அரசு தரப்பில்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:24:48 +0530

சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் 01.09.2023ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4) இவ்வழக்கு விசாரணையில் இருந்த நிலையில், 7வது எதிரி ராஜேந்திரன் என்பவர் இறந்து விட்டதாக தெரிவித்து கடந்த 01.07.2020ம் தேதி அவரது இறப்பு சான்றிதழ் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் 7வது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போனதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5) குற்றப்பத்திரிக்கையில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்து, இரு தரப்புக்கும் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, இரு தரப்பையும் கேட்டும், எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஆவணங்களைப் பரிசீலனை செய்த வகையில் 1, 3 எதிரிகள் மீது பிரிவுகள் 147, 324, 506(ii) இ.த.சவின் கீழும், 5 முதல் 8 எதிரிகள் மீது பிரிவுகள் 147, 294(b), 506(ii) இ.த.சவின் கீழும், 2வது எதிரி மீது பிரிவு 147, 427 இ.த.சவின் கீழும், 4வது எதிரி பிரிவுகள் 147, 324, 427, 506(ii) இ.த.சவின் கீழும் 02.09.2022ம் தேதியன்று பிரிவு 240 கு.வி.மு.ச–வின் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என கூறினார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

6) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:25:04 +0530

சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

7) <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு:-</u>

கடந்த 07.05.2020ம் தேதி இரவு 10.00 மணிக்கு பன்னியாமலை கிராமத்தில் முன் விரோதம் காரணமாக வாதியின் உறவினர் குருசாமி மகன் ஜெயச்சந்திரன் என்பவரை 1, 3, 4 எதிரிகள் சேர்ந்து ஜெயச்சந்திரன் தலையிலும், வலது பக்க காதிலும் கம்பால் அடித்து விட்டதாகவும், ஜெயச்சந்திரனுக்கு சொந்தமான TN 57 BD 1550 என்ற இருசக்கர வாகனத்தை கீழே தள்ளிவிட்டு வாதிக்கு சொந்தமான TN 38 BH 8704 என்ற பொலிரோ காரில் ஜெயசந்திரனையும், அவரின் தாயார் சித்ரா ஆகியோர்களையும் ஏற்றிக்கொண்டு வாதி 07.05.2020ம் தேதி இரவு 11.00 மணிக்கு நத்தம் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்காக பன்னியாமலை ஊரின் மேற்கே உள்ள மெயின்ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது எதிரிகள் அனைவரும் ஒன்றுகூடி வாதியின் வண்டியை மறித்து 2, 4 எதிரிகள் இருவரும் சேர்ந்து கல்லால் காரின் முன்பக்க கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியும், 5 முதல் 8 எதிரிகள் ஆபாசமான வார்த்தைகளால் திட்டியும் கொலை மிரட்டல் விடுத்ததாக அ.சா.1 ராஜா நத்தம் காவல்நிலையத்தில் அ.த.சா.ஆ.1 புகார் கொடுத்துள்ளார்.

8) மேற்படி புகாரை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பட்டியல் சாட்சி 10 சார்பு ஆய்வாளர் பிச்சைமணி அவர்கள் மனு ரசீது எண்.190/2020 என்று கொடுக்கப்பட்டிருந்த புகார் மனுவைப் பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நத்தம் காவல்நிலைய குற்ற எண். 390/2020 சட்டபிரிவுகள் 147, 294(பி), 323, 341, 427, 506(2) இ.த.ச.வாக வழக்கு பதிவு செய்து அ.த.சா.ஆ.4 முதல் தகவல்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:25:10 +0530

அறிக்கை தயார் செய்துள்ளார். 12.05.2020ம் தேதி 13.00 மணிக்கு சம்பவ இடமான பன்னியாமலை கிராமத்தில் ஊருக்கு மேற்கே உள்ள இடத்தில் வைத்து சாட்சிகள் பட்டியல் சாட்சி 5 கருப்பன் மற்றும் அ.சா.5 வெள்ளைச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.5 மாதிரி வரைபடம் வரைந்து அ.த.சா.ஆ.6 பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் ராஜா, ஜெயசந்திரன், சித்ரா, குருசாமி, சின்னக்கருப்பன், வெள்ளைச்சாமி, ராம்குமார் மற்றும் சக்தி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின் 1 முதல் 8 வரையிலான எதிரிகள் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணையில் சென்றுள்ளதால் அவர்களை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட ஜெயச்சந்திரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் அ.சா.7 சிவக்குமார் என்பவரை விசாரித்து அ.த.சா.ஆ.3 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த 06.02.2021ம் தேதி சட்டபிரிவுகள் 147, 294(பி), 323, 341, 427, 506(2) இ.த.ச.வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

9) பதிவு செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை குறித்து 313(1)(ஆ)ன் கீழ் எதிரிகளிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது அரசுத்தரப்பு சாட்சியம் பொய் என்றும், தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:25:17 +0530

10) மாறாக எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும் வாதியின் உறவினர்கள் என்றும், எதிரிகள் சேதப்படுத்தியதாக சொல்லும் வாகனம் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பவில்லை என்றும், எதிரிகள் கல்லால் எறிந்ததில் தான் அ.சா.1, அ.சா.3, அ.சா.4க்கு காயம் ஏற்பட்டதாக புகாரில் கூறவில்லை என்றும், வழக்கில் சம்பந்தப்பட்ட அ.சா.2ன் மீது ஏற்கனவே 4ம் எதிரியால் புகார் கொடுக்கப்பட்டதாகவும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.

11) இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும், ஆம் எனில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்க வேண்டிய தண்டனை என்ன? என்பதும் தான் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

**<u>12) தீர்வும் அதன் காரணமும்</u>**

12.1) அ.சா.1 இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியிடம் கொடுத்த புகார் அ.த.சா.ஆ.1–ல் "07.05.2020 அன்று இரவு 11 மணிக்கு பன்னியாமலை கிராமத்தை சேர்ந்த குருசாமி மகன் ஜெயசந்திரன் என்பவர் எனது வீட்டு கதவை தட்டி துாங்கிக்கொண்டிருந்த என்னை எழுப்பினார். அவரது தலையிலும் உடலிலும் பல இடங்களில் இரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது "என்னை அடித்துவிட்டார்கள். அவசரமாக ஆஸ்பத்திரிக்கு போகவேண்டும். உங்கள்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:25:22 +0530

காரினை எடுத்துக்கொண்டு வாருங்கள்" என்று கூறினார். ஜெயசந்திரன், குருசாமி, சித்ரா என்பவரை ஏற்றிக்கொண்டு நத்தம் அரசு மருத்துவமனைக்கு வரும் பொழுது எதிரிகள் காரின் முன்புற கண்ணாடியை அடித்து நொறுக்கியும், 2வது எதிரி காரில் அமர்ந்திருந்தவர்களை சட்டையை பிடித்து அடித்து வெளியே இழுத்தார். 4வது எதிரி காரின் வலது பக்க பின்புற கதவினை தான் வைத்திருந்த இரும்பு கம்பியால் பலமாக அடித்து உதைத்தார். 6, 7 , 8 எதிரிகள் அருகிலிருந்த பெரிய கற்களை எடுத்து எனது காரின் பின்புற கண்ணாடியை அடித்து உடைத்தார்கள். எதற்காக இப்படி செய்கிறீர்கள் உயிருக்கு போராடிக்கொண்டிருப்பவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்து செல்கிறேன். உதவி செய்வது தவறா என்று கேட்டேன். அதற்கு மேற்படி எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து என்னைப்பார்த்து மிக அக்கிரமமான வார்த்தைகளால் திட்டி ஒழுங்காக ஜெயசந்திரனை இங்கேயே இறக்கிவிடு இல்லையென்றால் உன்னையும் இங்கேயே மண்டையை உடைத்து கொன்று காலிபன்னிவிடுவோம் என்று கொலைமிரட்டல் விடுத்தனர் என்று தெரிவித்துள்ளார். மேற்படி புகாரின் அடிப்படையில் புலன்விசாரணை நடைபெற்று இறுதியில் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் மீதான இவ்வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிடமே உள்ளது.

12.2) 5 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 294(பி)யின் கீழ் குற்றம் புரிந்துள்ளாரா என்பதை காணவேண்டியுள்ளது. இ.த.ச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்ய ஒரு நபர் அசிங்கமான, அருவெறுக்கத்தக்க வார்த்தைகளை பொது இடத்தில் வைத்து மற்றவர்கள் முன்னிலையில் அவர்கள் கேட்கும்விதமாக சொல்லியிருக்க வேண்டும். அதனால் பாதிக்கப்பட்ட நபருக்கு பிறர் முன்னிலையில் அவமானம் நேர்ந்து மன

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:25:30 +0530

உளைச்சல் ஏற்பட்டு இருக்க வேண்டும். அதை பார்த்த பிற நபருக்கு அருவெறுப்பு ஏற்பட்டு இருக்க வேண்டும்.

12.3) வழக்கு கோப்புகளை பார்வையிடுகையில், நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது புகாரில் அ.த.சா.ஆ.1ல், .... "எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து என்னைப்பார்த்து மிக அக்கிரமமான வார்த்தைகளால் திட்டினார்கள்" ... என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் அ.சா.1 தனது சாட்சியத்தில் " 06.05.2020ம் தேதி எங்கள் ஊர் மந்தையில் வைத்து ஸ்ரீதர் மற்றும் திருமலை ஆகியோர் ஊரில் உள்ளவர்களிடம் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்கள்" என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் "கடந்த 06.05.2020ம் தேதி ஸ்ரீதர் மற்றும் அண்ணாமலை ஆகியோர் எங்கள் ஊர் மந்தையில் நின்று கொண்டு அசிங்கமாக பேசி கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள்" என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 மற்றும் அ.சா.6 கெட்டவார்த்தை கூறியதாக எந்தவொரு இடத்திலும் கூறவில்லை. அ.சா.4 தனது சாட்சியத்தில் சக்தி என்பவரும் ஆட்டோவில் சுமார் 20 நபர்களுடன் மருத்துவமனை வளாகத்தில் வந்து நின்று கொண்டு அசிங்கமாக பேசி வெளியே வாங்கடா என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்.

12.4) எதிரிகள் பொது இடத்தில் வைத்து ஆபாசமான வார்த்தைகளை பயன்படுத்தி திட்டியதால் பாதிக்கப்பட்ட சாட்சிக்கு அவமானம் நேர்ந்ததாகவும், அதனை கேட்ட சாட்சிகளுக்கு அருவறுக்கத்தக்க உணர்வு ஏற்பட்டதாக நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சியங்கள் இல்லை. எந்த எந்த எதிரிகள் என்ன என்ன கெட்டவார்த்தை பேசினார்கள் என்பது குறித்து சரியாக சாட்சியம் அளிக்கப்படவில்லை. மேலும், 5 முதல் 8 எதிரிகள் பொது இடத்தில்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:25:38 +0530

வைத்து ஆபாசமான வார்த்தைகளை பேசி அதனால் சாட்சிகளுக்கு இடையூறு ஏற்பட்டதாக நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்பதால் 5 முதல் 8 எதிரிகளின் மீதான இ.த.ச பிரிவு 294(b) ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12.5) 1, 3 முதல் 8 எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளதை காணமுடிகிறது. இ.த.ச பிரிவு 506(ii)ன் கீழ் நிரூபணம் செய்ய எதிரிகளின் செய்கையால் பாதிக்கப்பட்ட நபருக்கு அச்சம் ஏற்பட்டு அதன் காரணமாக உயிர் பயம் ஏற்பட்டிருக்க வேண்டும். மேலும் ஏதோ ஒரு பொருளோ, ஆயுதத்தை காட்டி மிரட்டியிருக்கவேண்டும். வெறும் வார்த்தைகள் மட்டும் கொல்லாமல் விடமாட்டேன் என்பது கொலைமிரட்டல் ஆகாது. என்ன வார்த்தைகள் கூறினார் என்றும் அது கொலைமிரட்டலாக உள்ளதா என்றும் தீர்மானிக்க வேண்டியதுள்ளது. அ.சா.1ன் புகார் வாக்குமூலத்தில் " உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்றும் மிரட்டினார்கள்" என சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் "...ஜெயச்சந்திரனை வாகனத்திலிருந்து இறக்கிவிடுமாறும், உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்றும் மிரட்டினார்கள்..." என்றும் அ.சா.2 தனது சாட்சியத்தில் "...எதிரிகள் அனைவரும் என் மாமாவிடம் நீ அவனை கீழே இறக்கிவிடாவிட்டால் உன் மண்டையை உடைத்து, உன்னையும் போட்டுத் தள்ளிவிடுவோம் என்று மிரட்டினார்கள்..." என்றும், சம்பவஇட சாட்சிகளான அ.சா.3, அ.சா.4 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் கொலை மிரட்டல் செய்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 எந்த எதிரி கொலை மிரட்டல் விடுத்தார் என்று குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை, மேலும் இருவரது சாட்சியத்திலும் முரண்பாடுகள் உள்ளது. எதிரிகள் கூறியதை கேட்டு அச்சம் ஏற்பட்டு, உயிர் பயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:25:42 +0530

தெரிவிக்கவில்லை என்பதை காணமுடிகிறது. எனவே பிரிவு 506(ii) இ.த.சவின் கீழ் 1, 3 முதல் 8 எதிரிகளின் செய்கையால் அ.சா.1ற்கு உயிருக்கு அச்சுறுத்தலோ அல்லது உயிர் பாதுகாப்பு குறித்த பயம் ஏற்பட்டதாக அரசு தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணத்துடன் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**1, 3 எதிரிகள் மீது பிரிவுகள் 147, 324 இ.த.சவின் கீழும், 5, 6 மற்றும் 8 எதிரிகள் மீது பிரிவுகள் 147 இ.த.சவின் கீழும், 2வது எதிரி மீது பிரிவு 147, 427 இ.த.சவின் கீழும், 4வது எதிரி பிரிவுகள் 147, 324, இ.த.ச கீழும் குற்றம் புரிந்துள்ளார்களா என்பது குறித்த பரிசீலனை**

12.6) அ.சா.1 தனது சாட்சியத்தில் "07.05.2020ம் தேதி என் தங்கையின் கணவர் குருசாமியும், ஜெயச்சந்திரனும் இருசக்கர வாகனத்தில் அவருடைய தோட்டத்திற்கு சென்றபோது, இரவு 10.00 மணிக்கு பிரேம் என்பவர் கம்பை வைத்து என் தங்கை மகன் ஜெயச்சந்திரனின் தலையில் அடித்து பலத்த இரத்தக்காயம் ஏற்படுத்தியதாகவும், சுரேஷ் என்பவர் ஜெயச்சந்திரனின் வலதுபக்க காதில் கையால் அடித்து இரத்தக் காயப்படுத்தியதாகவும், ஸ்ரீதர் என்பவர் ஜெயச்சந்திரனின் இருசக்கர வாகனத்தை கீழே தள்ளிவிட்டு கையால் முதுகில் குத்தியதாகவும் அதை பார்த்த குருசாமி அவர்களை விலக்கிவிட்டு ஜெயச்சந்திரனை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்ததாக கூறினார் என்றும், காரில் சென்ற போது எதிரிகள் வழிமறைத்து காரை சேதப்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

12.7) சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2 ஜெயச்சந்திரன் தனது சாட்சியத்தில், .... 07.05.2020ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் நானும், என் அப்பா குருசாமியும் எங்கள் ஊரில் உள்ள எங்களது தோட்டத்திற்கு எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, பிரேம் என்பவர்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:25:56 +0530

எங்களை வழிமறித்து கட்டையை வைத்து என்னை தலையில் அடித்து காயப்படுத்தியதில், எனது சட்டை முழுவதும் ரத்தமானது.. சுரேஷ் என்பவர் கையால் எனது வலது காதில் அடித்தார். ஸ்ரீதர் என்பவரும் மேற்படி இருவருடன் சேர்ந்து எங்களை வழிமறித்து பைக்கை கீழே தள்ளிவிட்டனர். பின்னர் மூவரும் சேர்ந்து எங்களை பிரேம் கட்டையாலும், மற்ற இருவரும் கையாலும் சரமாரியாக அடித்தார்கள். என் அப்பா அவர்களை விலக்கிவிட முயற்சி செய்தும் அவரால் முடியவில்லை. நான் பைக்கிலிருந்து கீழே விழுந்த நான் பைக்கையும், எனது மொபைல் போனையும் அங்கேயே போட்டுவிட்டு எழுந்து என் மாமா ராஜா (அ.சா.1)ன் வீட்டிற்கு ஓடினேன். அங்கு எனக்கு ரத்தம் வழிந்ததால் மயக்கமாகிவிட்டேன். எனக்கு அவர்கள் தண்ணீர் கொடுத்து அவரது காரிலேயே கொரோனா காலமான அன்றைய தினம் நத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் என் அப்பா, அம்மாவுடன் நத்தம் அரசு மருத்துவமனையில் தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போட்டுக் கொண்டு 4 நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் ... என்று சாட்சியம் அளித்துள்ளதை காணமுடிகிறது. சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான அ.சா.3 சித்ரா தனது சாட்சியத்தில், .... கடந்த 07.05.2020ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் எங்கள் ஊர் பஸ் ஸ்டாப் அருகில் இரு சக்கர வாகனத்தில் என் மகனும், என் கணவரும் தோட்டத்திற்கு சென்றபோது சுரேஷ், பிரேம், ஸ்ரீதர் ஆகியோர் வழிமறித்து பிரேம் என்பவர் கம்பால் அடித்து என் மகனின் தலையில் காயப்படுத்தியும், சுரேஷ் என்பவர் கையால் என் மகனின் வலது காதில் அடித்தும், ஸ்ரீதர் என்பவர் இருசக்கர வாகனத்தை தள்ளிவிட்டு வண்டியை அடித்து நொறுக்கிவிட்டு என் மகனின் செல்போனை எடுத்துக் கொண்டார்கள். சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தபோது என் மகனுக்கு தலையில் இருந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. பின்னர் என் மகனை எனது அண்ணன் ராஜா(அ.சா.1)வின் வீட்டிற்கு அழைத்துச் சென்றோம். என் அண்ணன்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:26:05 +0530

அவருடைய காரில் எங்களை நத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது சுரேஷ் என்பவர் வீட்டின் அருகில் ஸ்ரீதர், சுரேஷ், அண்ணாமலை, வெண்ணிலா ஆகியோர் எங்களை இரும்பு தடியை காட்டி வழிமறித்தார்கள். என் அண்ணன் காரை நிறுத்தியபோது வெண்ணிலா என்பவர் கார் கதவை திறந்து ரத்தக் காயத்துடன் இருந்த என் மகனை வெளியே இழுக்க முயற்சி செய்தபோது, நாங்கள் கதவை சாத்திக் கொண்டோம். அப்போது சுரேஷ் என்பவர் இரும்பு பைப்பை வைத்து காரின் வலது பக்க கதவில் அடித்துவிட்டார். பின்னர் சின்னத்தம்பி, ராஜேந்திரன், பழனி ஆகியோர் காரின் பின் பக்கம் கல்லைக் கொண்டு எறிந்தார்கள் ... என்று சாட்சியம் அளித்துள்ளதை காணமுடிகிறது.

12.8) சம்பவத்தை நேரில் பார்த்த அ.சா.4 குருசாமி தனது சாட்சியத்தில் "கடந்த 07.05.2020ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் எங்கள் ஊரிலிருந்து தோட்டத்திற்கு செல்லும் வழியில் தார் ரோட்டில் எதிரியின் வீட்டின் முன்பாக நானும், என் மகனும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, பிரேம் என்பவர் கம்பால் என் மகனின் தலையில் கம்பால் அடித்து ரத்தம் வந்தது. சுரேஷ் என்பவர் கையால் என் மகனின் வலது காதில் அடித்த ரத்தக் காயப்படுத்தினார். வண்டியிலிருந்து நான் இறங்கும்போது ஸ்ரீதர் என்பவர் என் மகனை கையால் அடித்து வாகனத்துடன் கீழே தள்ளிவிட்டார். அப்போது என் மகன் மயங்கிவிட்டதால் என் மகனை நான் தூக்கிக் கொண்டு என் மைத்துனர் ராஜா வீட்டிற்கு கொண்டு சென்றுவிட்டேன் என்றும், அதன்பின்னர் எதிரிகள் தங்களை மருத்துவமனைக்கு செல்லவிடாமல் காரை தடுத்து நிறுத்தி, காரை சேதப்படுத்தியது தொடர்பாகவும் அ.சா.3–ன் சாட்சியத்தை ஒற்றி சாட்சியம் அளித்துள்ளதை காணமுடிகிறது. சம்பவத்தை நேரில் பார்த்த அ.சா.6 சக்தி தனது சாட்சியத்தில் "சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் எனது வீட்டில் இருந்த போது சுரேஷ்யின் மனைவி சுரேசுக்கு உடம்பு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:26:12 +0530

முடியவில்லை என்றும் மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்று சொல்லி என்னை அழைத்தார். அதனால் நான் 4ம் எதிரி சுரேஷ் வீட்டிற்கு சென்று அங்கிருந்தவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். ஆட்டோவில் 4, 5 பெண்கள் மற்றும் 2, 3 ஆண்களை அழைத்து சென்று நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள் ... என்று சாட்சியம் அளித்துள்ளதை காணமுடிகிறது.

12.9) அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அ.சா.7 சிவக்குமார் தனது சாட்சியத்தில் ".... கடந்த 08.05.2020 அன்று அதிகாலை 12.00 மணிக்கு குருசாமி என்பவர் ஜெயச்சந்திரன் என்பவரை சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். அவரை நான் விசாரித்தபோது அவர் தன்னை 08.05.2020அன்று இரவு 11.00 மணியளவில் அடையாளம் தெரிந்த 4 நபர்கள் இரும்பு கம்பியால் அவரது ஊரில் வைத்து தாக்கியதாக கூறினார். இடது பின் பக்க தலை பகுதியில் சிதைந்த காயம் காணப்பட்டது..." என்று சாட்சியம் அளித்துள்ளதை காணமுடிகிறது. அ.சா.1க்கு விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.3 அளித்துள்ளதை காணமுடிகிறது. சம்பவம் 07.05.2020ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு சம்பவம் நடந்துள்ளது. மேற்படி மருத்துவ ஆவணத்தின் வாயிலாக காயம்பட்ட ஜெயச்சந்திரன் அன்றைய தினமே 08.05.2020 அன்று 12.00 AM மணியளவில் நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. எதிரி தரப்பில் 08.05.2020அன்று இரவு 11.00 மணியளவில் சம்பவம் நடந்ததாக முரண்பட்டு தெரிவித்துள்ளார் என்றும், வழக்கு பொய் வழக்கு என்றும் எடுத்துரைக்கப்பட்டது. மாறாக அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் 08.05.2020ம் தேதி அதிகாலை சிகிச்சைக்கு சேர்ந்துள்ள நிலையில் மருத்துவரிடம் அன்றைய தினம் இரவு சம்பவம் நடந்தது என்ற விபரம் தான் தவறுதலாக 08.05.2020ம் தேதி இரவு 11.00 மணிக்கு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:26:18 +0530

நடந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று எடுத்துரைக்கப்பட்ட வாதம் ஏற்புடையதாகவே உள்ளது. மேலும், அ.சா.2 மற்றும் அ.சா.7ன் சாட்சியம் மற்றும் அ.த.சா.ஆ.3 ஆகியவற்றின் வாயிலாக காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம், அதன் அளவுகள் ஆகியவை குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

12.10) எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தெரிந்த 4 நபர்கள் அடித்ததாக கூறும் நிலையில், புகாரில் 8 நபர்களின் பெயரை தெரிவித்துள்ளதாகவும், காயம்பட்ட நபர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டாரா இல்லை, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்பது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என்றும் வாதிட்டார். மேலும் A.R.பதிவேட்டில் காயம் பட்ட நபர் தனக்கு அடையாளம் தெரிந்த நான்கு ஆண் நபர்கள் கத்தி (அருவாள்) மற்றும் Wooden stick(கம்பு) ஆகியவற்றால் தாக்கியதாக தெரிவித்துள்ளார் என்றும் அதற்கு முரண்பட்டு 8 நபர்கள் தாக்கியதாக புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார் என்றும், மிகைப்படுத்தி தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்துக்கள் எதுவும் இவ்வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றும், அ.சா.1க்கு எதிரிகள் தாக்கியதால் காயம் ஏற்படவில்லை என்றும், முன்பகை உள்ள நிலையில் பொய் புகார் அளித்துள்ளனர் என்றும், அதனால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கவேண்டும் என்றும் வாதத்தின்போது தெரிவித்துள்ளார். எதிரிகள் தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதம் கைப்பற்றப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக வழக்கை ஒதுக்கிவிடமுடியாது. போதுமான வகையில் மற்றும் சம்பவ நேரடிச் சாட்சியங்கள் இருக்கும்போதும், அவை மருத்துவச் சான்றுகளால் உறுதிப்படுத்தப்படும் போதும், குற்றச் செயலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் மீட்கப்படாதது அரசு தரப்பு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:26:25 +0530

வழக்கினை பாதிக்காது என்று உச்சநீதிமன்றம் பல வழக்குகளில் மேற்கோள்காட்டியுள்ளது.

12.11) வழக்கு கோப்பினை பரிசீலிக்கையில், அ.சா.1 முதல் அ.சா.6 வகையான சாட்சிகளின் மூலம் அ.சா.2யை எதிரிகள் வழிமறித்து தடுத்து 1 , 3, 4 எதிரிகள் ஆயுதங்கள் கொண்டு தாக்கினார்கள் என்பதும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகிய சாட்சிகளின் சாட்சியத்தின் வாயிலாக இருதரப்பினருக்கும் இடையே பிரச்சனை நடந்தது என்பதை அறிய முடிகிறது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் நம்பகதன்மை கொண்டதாகவும், அரசு தரப்பிற்கு வலுவூட்டும் விதத்திலும் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் சம்பவம் நடந்த அன்றே சம்பவ இடத்திற்கு சென்று அ.த.சா.ஆ.6 பார்வை மகஜர், அ.த.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்ததை உறுதி செய்யும் வகையில் மேற்படி மகஜர் சாட்சிகளான அ.சா.5 வெள்ளைச்சாமி தனது சாட்சியத்தில் "சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு நான் ஆட்டுவியாபாரம் செய்து முடித்து விட்டு இரவு 11 மணியளவில் பன்னியாமலை ரோட்டில் சென்றுகொண்டிருந்த போது கார் ஒன்று கண்ணாடி சேதப்படுத்தப்பட்டு வழியில் ஓரத்தில் நின்றது. யார்அடித்து சேதப்படுத்தினார் என்று தெரியாது. அதன் பிறகு நான் பன்னியாமலை ரோட்டின் அருகே டீ கடையில் டீ குடித்து கொண்டிருந்த போது அங்கு வந்த போலீசார் காலை சுமார் 11 மணியளவில் சம்பவம் பற்றி தெரிவித்து என் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்ததில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன்" என்று கூறுவதன் மூலம் சம்பவயிடத்தில் வைத்து பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம்தயார் செய்துள்ளதை காணமுடிகிறது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:26:29 +0530

12.12) எதிரிகள் தரப்பில் அ.சா.3–ன் குறுக்கு விசாரணையின் போது "நான் சொல்லும் விதத்தில் ஆட்டோவில் 15 நபர்கள் வருவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றாலும், எனது வயதான அப்பா ஏகாந்தம் என்பவரை தான் சக்தி என்பவரது ஆட்டோவில் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார் என்றாலும் சரியல்ல. சக்தி என்பவரும் இவ்வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டிருப்பார் என்றால் சரியல்ல" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அ.சா.4 ன் குறுக்குவிசாரணையிலும் 72 வயதான ஏகாந்தம் என்பவரை மூன்று லாந்தர் என்ற இடத்திலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கவே ஆட்டோவில் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆட்டோ ஓட்டுநர் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் அவரது சாட்சியத்தில் "மார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் எனது வீட்டில் இருந்த போது சுரேஷ்யின் மனைவி சுரேசுக்கு உடம்பு முடியவில்லை என்றும் மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்று சொல்லி என்னை அழைத்தார். அதனால் நான் 4ம் எதிரி சுரேஷ் வீட்டிற்கு சென்று அங்கிருந்தவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். ஆட்டோவில் 4, 5 பெண்கள் மற்றும் 2, 3 ஆண்களை அழைத்து சென்று நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டேன்" என்று தெரிவித்தும், குறுக்கு விசாரணையில் "சுரேஷ் என்பவரை மருத்துவமனையில் சேர்ப்பதற்காக தான் அழைத்து வந்தேன் என்றால் சரிதான்" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் எதிரிகள் தரப்பில் முன்பு 1ம் எதிரியின் தந்தை ஏகாந்தம் என்பவரை சிகிச்சைக்கு அழைத்து வரவே ஆட்டோ வரவழைக்கப்பட்டதாகவும், பின்னர் எதிரி சுரேஷ் என்பவரை சிகிச்சைக்கு அழைத்து வரவே ஆட்டோ வரவழைக்கப்பட்டதாகவும் இரண்டு விதமான முரண்பட்ட நிலைப்பாட்டை தெரிவித்துள்ளதை காண முடிகிறது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:26:37 +0530

12.13) இவ்வழக்கில் கார், இருசக்கர வாகனம் மற்றும் செல்போன் ஆகியவற்றை எதிரிகள் சேதப்படுத்தியதாகவும், ஒவ்வொரு எதிரியின் செய்கை குறித்தும் அரசு தரப்பு சாட்சிகள் எடுத்துரைத்துள்ளார்கள் என்றபோதிலும், அதை நிரூபணம் செய்யும் விதமாக அரசு தரப்பில் சேதமடைந்த வாகனத்தின் நிலையை குறித்தும், கண்ணாடித் துண்டுகள் அல்லது உடைந்த பாகங்கள் குறித்தும், வாகனங்களின் சேத மதிப்பு மற்றும் அதற்கான சான்று, விலைப்பட்டியல், வாகனங்களின் புகைப்படம் மற்றும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65B –ன் கீழான சான்றிதழ் போன்றவை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் அ.சா.4 தனது சாட்சியத்தில் "பழனி, ராஜேந்திரன், கருத்தழகு ஆகிய மூவரும் காரின் பின் பக்கம் பெரிய கல்லை எடுத்துப் போட்டதில் கண்ணாடி உடைந்து அந்த கல் காருக்குள் விழுந்துவிட்டது" என்று தெரிவித்துள்ளார். ஆனால் புலன்விசாரணை அதிகாரி காருக்குள் கிடந்த கல் மற்றும் கண்ணாடித்துண்டுகள் ஆகியவற்றை கைப்பற்றவில்லை என்பதை காண முடிகிறது. இது அரசு தரப்பிற்கு பாதகமாகவே உள்ளது. எனவே எதிரிகள் மீதான இதச பிரிவு 427–ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

12.14) மேலும், அ.சா.2 எதிரிகளை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டி அவரால் தான் தனக்கு காயம் ஏற்பட்டது என்று தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2ற்கு ஏற்பட்ட காயத்தை உறுதி செய்யும் வகையில் சிகிச்சை அளித்த மருத்துவர் அ.சா.7ன் சாட்சியம் அமைந்துள்ளதை காணமுடிகிறது. அ.சா.2–ற்கு காதில் இரத்தம் வந்ததாக மருத்துவர் தெரிவிக்கவில்லை என்றும், அதற்கு சிகிச்சை அளித்ததாகவும் குறிப்பிடப்படவில்லை என்றும் மிகைப்படுத்தப்பட்ட சாட்சியம் என்றும் எதிரிகள் தரப்பில் வாதம் முன்னிடப்பட்டது. அ.சா.2–ற்கு தலையில் ஏற்பட்ட காயம் உறுதி

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:26:42 +0530

செய்யப்பட்டுள்ளது, காதில் இரத்தம் என்பது ஒரு கூடுதல் விவரமே தவிர அடிப்படை முரண்பாடு அல்ல. சிறு சிறு முரண்பாடுகளால் ஒட்டுமொத்த சாட்சியையும் நிராகரிக்க முடியாது. எனவே மேற்படி எதிரிகள் தரப்பு வாதம் நிராகரிக்கப்படுகிறது.

12.15) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் ஒவ்வொரு எதிரியின் செய்கை மற்றும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் குறித்தும், அ.சா.2–யை தாக்கியும், அதன்தொடர்ச்சியாக எதிரிகள் ஒன்று சேர்ந்து வந்து வழிமறித்து குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது தொடர்பாகவும் அளித்துள்ள சாட்சியம் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகவும், நம்பகதன்மை வாய்ந்ததாகவும், அ.சா.2–ற்கு தலையில் ஏற்பட்ட காயங்களை சரியாக குறிப்பிட்டும், அவை உறுதியூட்டும் விதத்திலும் அமைந்துள்ளது என்றும், அ.சா.2–ற்கு எதிரிகளால் காயம் ஏற்பட்டு, அதற்கு அ.சா.2 சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளார் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரிகள் தரப்பில் சிறுசிறு முரண்பாடுகள் தொடர்பாக வழக்கு முழுமையாக பாதிப்படைந்துள்ளது என்ற வாதம் நிராகரிக்கப்படுகிறது. எனவே அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து 1 முதல் 8 எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்றுகூடி வழிமறித்து 1, 3, 4 எதிரிகள் குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டு, அ.சா.2யை தாக்கி காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், இதச பிரிவு 324ன் கீழ் 1வது எதிரி குற்றவாளி எனவும், 3, 4 எதிரிகள் இ.த.ச பிரிவு 323ன் கீழ் குற்றவாளிகள் எனவும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:26:50 +0530

**13. (அ) தண்டனை குறித்த கேள்வி–**

இவ்வழக்கில் 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் 147 இ.த.ச பிரிவின் கீழும், 1வது எதிரி இ.த.ச 324 பிரிவின் கீழும், 3, 4 எதிரிகள் இ.த.ச பிரிவு 323ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் குற்றமிழைத்துள்ளதாக தீர்மானித்து குவிமுச பிரிவு 248(2)ன் கீழ் வழங்கப்பட வேண்டிய தண்டனை குறித்து கேட்ட போது எங்களது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு குறைந்த பட்ச தண்டணையாக அபராதம் மட்டும் விதிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என கோரிக்கை வைத்தார்கள்.

**13.(ஆ) நன்னடத்தை சட்டத்தின் கீழான பலன் குறித்த பரிசீலனை–**

இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரின் காயங்களை கருத்தில் கொண்டும், எதிரிகள் ஒன்றுகூடி குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டு அ.சா.2–ற்கு காயம் ஏற்படுத்தி உள்ளார்கள் என்பதையும் கவனத்தில் கொண்டு குவிமுச பிரிவு 360ன் கீழான பலனை அல்லது நன்னடத்தை கண்காணிப்பு சட்டத்தின் கீழான பலனை 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகளுக்கு வழங்குவது நீதியின் நலனுக்கும் பொது நலனுக்கும் உகந்ததல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

1 முதல் 6 மற்றும் 8 எதிரிகளின் வயதை கருத்தில் கொண்டும், அவரது எதிர்கால வாழ்க்கையை கருத்தில் கொண்டும், மேற்படி 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகளுக்கு எதிராக வேறு எதுவும் வழக்குகள் உள்ளதாகவோ அல்லது தண்டனை பெற்றுள்ளதாகவோ அரசு தரப்பில் எடுத்துரைக்கப்படாததை கருத்தில் கொண்டும், மேற்படி 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகளுக்கு இந்த ஒரு வழக்கு மட்டும் தான் உள்ளது (1st Offender) என்பதை கருத்தில் கொண்டும், காயம் சிறிய காயம் என்பதாலும் மேற்படி 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகளுக்கு அபராத தொகை விதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:26:55 +0530

**இறுதியாக,**

**1)** அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், இவ்வழக்கின் 1, 3 எதிரிகள் மீது பிரிவுகள் 506(ii) இ.த.சவின் கீழும், 5, 6 மற்றும் 8 எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 506(ii) இ.த.சவின் கீழும், 2வது எதிரி மீது பிரிவு 427 இ.த.சவின் கீழும், 4வது எதிரி பிரிவுகள் 427, 506(ii) இ.த.சவின் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் மீதான மேற்படி குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகளுக்கு வழங்கி, மேற்படி 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

2) இ.த.ச பிரிவு 147 ன் கீழான குற்றசாட்டை பொறுத்து 1 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் குற்றவாளிகள் என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், இ.த.ச பிரிவு 147ன் கீழ் முதல் 6 மற்றும் 8 எதிரிகளுக்கு ரூ.200/− அபராதம் விதித்தும், செலுத்த தவறினால் கூடுதலாக 1 வாரம் சிறை தண்டனை விதித்தும், இ.த.ச பிரிவு 324 ன் கீழான குற்றசாட்டை பொறுத்து 1ம் எதிரி குற்றவாளி என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், இ.த.ச பிரிவு 324ன் கீழ் 1வது எதிரிக்கு ரூ.2500/− அபராதம் விதித்தும், செலுத்த தவறினால் கூடுதலாக 1 மாதம் சிறை தண்டனை விதித்தும், இ.த.ச பிரிவு 323 ன் கீழான குற்றசாட்டை பொறுத்து 3, 4 எதிரிகள் குற்றவாளிகள் என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், இ.த.ச பிரிவு 323ன் கீழ் 1வது எதிரிக்கு ரூ.1000/− அபராதம் விதித்தும், செலுத்த தவறினால் கூடுதலாக 1 மாதம் சிறை தண்டனை விதித்தும், கு.வி.மு.ச பிரிவு 248(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 முதல் 6

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:27:03 +0530

மற்றும் 8 எதிரிகள் முன்பிணையில் சென்றுள்ளதால் கு.வி.மு.ச பிரிவு 428ன் கீழான உத்தரவு குறித்து விளக்கப்படவில்லை. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை. மொத்த அபராத தொகை ரூ.5900/-

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ம் நாள் வியாழக்கிழமை என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.09 07:27:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**அரசுத் தரப்பு சாட்சிகள் -**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 07.12.2023 | திரு.ராஜா (புகார்தாரர்) |
| அ.சா.2 | 01.10.2024 | திரு.ஜெயச்சந்திரன் (காயம்பட்ட சாட்சி) |
| அ.சா.3 | 17.02.2026 | திருமதி.சித்ரா (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | 12.03.2026 | திரு.குருசாமி (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.5 | 12.03.2026 | திரு.வெள்ளைச்சாமி (பார்வைமகஜர் சாட்சி) |
| அ.சா.6 | 12.03.2026 | திரு.சக்தி (மற்ற சாட்சி) |
| அ.சா.7 | 24.03.2026 | திரு.சிவக்குமார் (மருத்துவர்) |
| அ.சா.8 | 26.03.2026 | திரு.கார்த்திகேயன் (சார்பு ஆய்வாளர்) |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 / அ.சா.1 | 12.05.2020 | புகார் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.2 / அ.சா.5 | 12.05.2020 | பார்வைமகஜரிலுள்ள 2வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 / அ.சா.7 | 12.05.2020 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று (ஜெயச்சந்திரன்) |
| அ.சா.ஆ.4 / அ.சா.8 | 12.05.2020 | முதல்தகவல்அறிக்கை |
| அ.சா.ஆ.5 / அ.சா.8 | 12.05.2020 | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.6 / அ.சா.8 | 12.05.2020 | பார்வைமகஜர் |

<u>அரசுத் தரப்பு சான்றுபொருட்கள் :</u>– இல்லை

<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள், சான்று பொருட்கள் :</u>– இல்லை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.09 07:27:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

<u>குறிப்பு –</u>

1) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் அழைத்து விசாரணை செய்யப்படவில்லை.

3) இவ்வழக்கின் முடிவு குறித்து சிறு குறிப்பு காவல் துறையினருக்கு வழங்கப்பட்டது.

4) எதிரிகளிடமிருந்து அபராத தொகை ரூ.5,900/– வசூலிக்கப்பட்டது.

5) தீர்ப்பின் நகலை எதிரிகளுக்கு இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டது.

6) தீர்ப்பின் நகலை புகார்தாரருக்கு நத்தம் காவல் நிலைய போலீசார் மூலம் இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.09 07:27:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.